## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

முன்னிலை:– திருமதி. ஆ. சுபஸ்ரீ, எல்.எல்.எம்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09 ஆம் நாள் திங்கள்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ விசுவாவசு வருடம், தை திங்கள் 26 ம் நாள்

இ.ம.எண். 377 /2025
இன்
அசல் வழக்கு எண். 24/2023

கோவிந்தராஜ் ... மனுதாரர் / வாதி

/எதிர்/

1. தீபா
2. கனகராஜ் ... எதிர்மனுதாரர்/ பிரதிவாதிகள்

–––––––

இம்மனு கடந்த 05.02.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.R.B.ராமசந்திரன் அவர்கள் முன்னிலையாகியும் நிகழ்த்திய இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

### உத்தரவு

தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 1908ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 39 விதி 1 மற்றும் 2ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :–

**2.1** மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 07.03.2007ம் தேதியன்று மனுதாரர் அவரது சகோதரர் கதிர்வேல் என்பவருடன் சேர்ந்து மனு சொத்தை கிரைய ஆவண எண். 2460/2007 மூலம் கிரையம் பெற்றார். அதன் பிறகு 04.03.2013ம் தேதியன்று மனுதாரரின் சகோதரர் கதிர்வேல் மனுதாரருக்கு மேற்படி சொத்தில் உள்ள அவரது பாகத்தை செட்டில்மெண்ட் எழுதிகொடுத்துள்ளார். மனு சொத்தில் சுவாதீனத்திலும் அனுவபத்திலும் மனுதாரர் இருந்து வருகிறார். கிழபுறம் தென்வடல் 32 அடி அகலம், மேல்புறம் தென்வடல் 38 அடி அகலம் கொண்ட தாவா சொத்தை மனுதாரர் கிரையம் பெற்று அதன் தென்புறத்தில் கிழமேலாக காம்பவுண்டு சுவர் எழுபினார்.

**2.2** மனு சொத்தின் தென்புறத்தில் 1ம் பிரதிவாதியின் வீடு உள்ளது. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் கணவராவார். 1ம் பிரதிவாதி தரை தளத்தில் கட்டிடத்துடன் கிரையம் பெற்றார். பிரதிவாதிகள் தற்போது அவர்களது கட்டித்தை விரிவுபடுத்துகிறார்கள். அவ்வாறு விரிவுபடுத்தும்போது மனுதாரரின் சொத்தை ஆக்கிரமிக்கவேண்டி மனு சொத்தின் தென்புறம் உள்ள கிழமேல் காம்பவுண்டு சுவர் மீது கட்டிடம் கட்ட முயற்சிக்கிறார்கள். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட விஸ்தீரணத்தைவிட அதிகளவில் கட்டிம் கட்டுவதற்கு முயற்சிக்கிறார்கள். மேலும் மனுசொத்தின் கிழபுறம் அமைந்துள்ள 23 அடி லேஅவுட் ரோட்டில் கட்டுமான பொருட்களை வைத்தும் வாகனங்களை நிறுத்தியும் இடையூறு செய்கிறார்கள்.

**2.3** இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு தற்காலிக உறுத்துக்கட்டளை பிறப்பிக்காததை எதிர்மனுதாரர்கள் சாதகமாக பயன்படுத்தி மேற்படி கட்டுமானத்தை தொடர்ந்து செய்துவருகிறார்கள். அவ்வாறு மனு சொத்தின் தென்புறம் உள்ள கிழமேல் காம்பவுண்டு சுவர் மீது எதிர்மனுதாரர்கள் கட்டிடம் கட்டினால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே, எதிர்மனுதாரர்களோ, அவரது ஆட்களோ, முகர்வர்களோ, மனு சொத்தின் தென்புறத்தில் உள்ள கிழமேல் காம்பவுண்டு சுவர் மீது மீண்டும் கட்டுமானத்தை கட்டி மனு சொத்தில் உள்ள மனுதாரரின் சுவாதீனத்தை இடையூறு செய்யக்கூடாது என்று அசல் வழக்கில் தீர்வு காணும்வரை எதிர்மனுதாரருக்கு எதிராக தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :–</u>

**3.1** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனு சொத்தை மனுதாரர்/வாதி கிரையம் பெறுவதற்கு முன்பே எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் அவர்களது சொத்தை 01.11.2006ம் தேதியன்று கிரையம் பெற்றுள்ளார்கள். கடந்த 2006ம் ஆண்டு செட்டிபாளையம் பஞ்சாயத்தில் முறையாக அனுமதி பெற்று மனு சொத்தின் தென்புறத்தில் 4 அடி இடைவெளியில் 8 இன்ச் காம்பவுண்டு சுவர் உட்பட சுற்று சுவர் எழுப்பி கட்டிடம் கட்டி எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள்.

**3.2** 2007ம் ஆண்டிற்கு பிறகு மனுதாரர்/ வாதி மனு சொத்தை கிரையம் பெற்று ஏற்கனவே எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கட்டிய

காம்பவுண்டு சுவர் அருகில் மனு சொத்தின் தென்புறத்தில் 1 ½ அடி அளவு மட்டுமே இடைவெளி விட்டு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு சொந்தமான காம்பவுண்டு சுவர் மீதிருந்தவாறே மனுதாரர்/வாதியின் வீட்டிற்கு பூச்சு மற்றும் கட்டி வேலைகளை செய்து வந்தார்.

**3.3** மனுதாரர் தரப்பில் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்67/2023 இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் 2006ம் ஆண்டு கட்டப்பட்ட கட்டிடத்திற்கு முன்பு 665 சதுரடி அளவில் இருந்த காலி இடத்தில் புதியதாக 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ம் தேதி முதல் கட்டிடம் கட்டிவந்தார்கள். இந்நிலையில் மேற்படி இடத்தின் மேற்கு பகுதியில் கட்டிடம் கட்டியபோது மனுதாரர் வேண்டும் என்றே கெட்ட எண்ணத்தில் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்களுக்கு பத்தியப்பட்ட இடத்தில் கட்டிடம் கட்ட தடை கோருவதற்கு மனுதாரருக்கு எவ்வித அருகதையும் இல்லை.

**3.4** எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட 2006ம் ஆண்டு எதிர்மனுதாரர்கள் கட்டிய 8 இன்ச் அளவுள்ள காம்பவுண்டு சுவற்றின் மீதிருந்தே மேற்படி கட்டுமானமானது கட்டப்பட்டு வருகிறது. மனுதாரரின் சொத்திற்குள் எள்ளலவும் அத்துமீறி கட்டுமானம் கட்டப்படவில்லை. மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் தவறானது, எனவே மனுவை தள்ளுபடி செய்யவேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ1 குறியீடு செய்யப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டது. நீதிமன்ற சான்றாவணங்களாக நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில்,
" மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா?என்பதேயாகும்".

**6. <u>தீர்வு</u> :–**

**6.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனு சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றும், கிழபுறம் தென்வடல் அடி 32, மேல்புறம் தென்வடல் அடி 38 என்று மனு சொத்தை மனுதாரர் கியைரம் பெற்றார் என்றும், கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு மனுதாரர் மனு சொத்தில் கட்டிடம் மற்றும் காம்பவுண்டு சுவற்றை கட்டினார் என்றும், மனு சொத்தின் தென்புறம் உள்ள காம்பவுண்டு சுவற்றின் மீது எதிர்மனுதாரர்கள் தற்போது கட்டிடம் கட்டுகிறார்கள் என்றும், நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் காம்பவுண்டு சுவற்றின் மீது எதிர்மனுதாரர்களின் முதல் தளம் கட்டப்பட்டுள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், நீதிமன்ற ஆணையரின் புகைப்படம் எண்.4ல் காம்பவுண்டு சுவற்றின் மீது கட்டிடம் உள்ளது தெளிவாக தெரிவதால் இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், 2023ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கில் எதிர்மனுதாரர்களின் சொத்தில் மேலும் கட்டிடம் கட்டக்கூடாது என்று

இந்த இடைகால மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிர்மனுதாரர்களின் சொத்தில் ஏற்கனவே கட்டிடம் உள்ளதை மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 34.9 சதுரடி அளவில் எதிர்மனுதாரர்களின் கட்டிடம் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றும், எதிர்மனுதாரர்கள் தான் கட்டிடம் கட்டி காம்பவுண்டு சுவர் கட்டப்பட்டது என்றும், மேற்படி காம்பவுண்டு சுவர் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6.4** அசல் வழக்கானது தாவா சொத்தின் தென்புறம் உள்ள கிழமேல் காம்பவுண்டு சுவரில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் புதியதாக கட்டிடம் கட்டி மனு சொத்தில் உள்ள மனுதாரர்/வாதியின் சுவாதீனத்தை இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.5** இம்மனுவானது மேற்படி பரிகாரம் குறித்து அசல் வழக்கில் தீர்வுகாணும்வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.6** மனு சொத்தை கடந்த 2007ம் ஆண்டு மனுதாரரும் அவரது சகோரரும் சேர்ந்து கிரையம் பெற்றதாகவும், அதன் பிறகு 04.06.2013ம் தேதியன்று மனுதாரரின் சகோதரர் மனுசொத்தில் உள்ள அவரது பாதி

பாகத்தை மனுதாரருக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்ததாகவும், கிழபுறம் தென்வடல் அடி 32, மேல்புறம் தென்வடல் அடி 38 அளவுள்ள மனு சொத்தின் தென்புறத்தில் கிழமேலாக மனுதாரர் காம்பவுண்டு சுவர் அமைத்து மனு சொத்தை அனுபவித்து வந்ததாகவும், மனு சொத்தின் தென்புறம் உள்ள எதிர்மனுதாரர்கள் அவர்களது சொத்தில் ஏற்கனவே இருந்த கட்டிடத்தை விரிவுபடுத்தியதாகவும், அவ்வாறு விரிவுபடுத்தும்போது மேற்படி கிழமேல் காம்பவுண்டு சுவற்றின் மீது கட்டுமானம் கட்ட முயற்சிப்பதாகவும், மனு சொத்தின் தென்புறம் உள்ள கிழமேல் காம்பவுண்டு சுவர் மீது எதிர்மனுதாரர்கள் இனி புதியதாக கட்டுமானம் கட்டக்கூடாது என்று அசல் வழக்கில் தீர்வு காணும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**6.7** எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரருக்கு முன்பே, அதாவது 2006ம் ஆண்டே மனு சொத்தின் தென்புறம் உள்ள எதிர்மனுதாரர்களின் சொத்தை அவர்கள் கிரையம் பெற்று மனு சொத்தின் தென்புறத்தில் 8இன்ச் அளவுள்ள காம்பவுண்டு சுவரை அமைத்து குடியிருந்து வருவதாகவும், எதிர்மனுதாரர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்திற்குள் 2022ம் ஆண்டு முதல் புதியதாக கட்டுமானத்தை விரிவுபடுத்துவதாகவும், எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் உள்ள 8 இன்ச் அளவுள்ள காம்பவுண்டு சுவர் மீதிருந்து தற்போதைய புதிய கட்டுமானம் கட்டப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

**6.8** மனுதாரர் கூறுவதுபோல் மனு சொத்தின் தென்புறம் உள்ள கிழமேல் காம்பவுண்டு சுவர் ம.சா.ஆ.1 கிரைய ஆவணப்படி மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இடத்திற்குள் உள்ளதா அல்லது எதிர் மனுதாரர்கள் கூறுவதுபோல் எ.ம.சா.ஆ.1 கிரைய ஆவணப்படி 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இடத்திற்குள் எதிர்மனுதாரர்களின் கட்டிடம் உள்ளதா என்பதை தீர்மானிக்கவேண்டியது அவசியமாக உள்ளது.

**6.9** இது குறித்து மனுதாரரின் ம.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை பரிசீலிக்கும்போது, இருபுறமும் கிழமேல் அடி 50, கிழபுறம் தென்வடல் அடி 32, மேல்புறம் தென்வடல் அடி 38 அளவுள்ள 1750 சதுரடி இடத்தை மனுதாரர் கிரையம் பெற்றுள்ளார். 1ம் எதிர்மனுதாரர் எ.ம.சா.ஆ.1 ஆவணப்படி இருபுறமும் கிழமேல் அடி 50, இருபுறமும் தென்வடல் அடி 35 அளவுள்ள 1750 சதுரடி இடம் 1ம் எதிர்மனுதாரருக்கு செட்டில்மெண்ட் எழுதிகொடுக்கப்பட்டுள்ளது.

**6.10** மனு சொத்து மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் சொத்தை பார்வையிட்டு, அளவீடு செய்து, புகைப்படம் எடுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையரின் நீ.ம.சா.ஆ.1 அறிக்கை, நீ.ம.சா.ஆ.2 நீதிமன்ற ஆணையர் வரைபடம் மற்றும் நீ.ம.சா.ஆ.3 நிலஅளவையர் வரைபடம் ஆகியவற்றை ஒருங்கே பரிசீலிக்கும்போது, மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு சொத்தின் கிழபுறம் தென்வடல் வெளிப்பகுதியின் அளவு 30 அடி 9 இன்ச் என்பதும், அதன் உட்பகுதியின் அளவு 30 அடி 10 இன்ச் என்பதும், மனுதாரரின் ம.சா.ஆ.1 கிரைய

ஆவணத்தில் உள்ளது போல் மனு சொத்தின் கிழபுறம் தென்வடல் 32 அடி அளவில் இல்லை என்பதும் தெரியவருகிறது.

**6.11** அதேபோல் 1ம் எதிர்மனுதாரரின் சொத்தின் கிழபுறம் தென்வடலின் வெளிப்பகுதியின் அளவு 34 அடி 9 இன்ச் என்பதும், அதன் உட்பகுதியின் அளவு 32 அடி 11 இன்ச் என்பதும், 1ம் எதிர்மனுதாரரின் செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ளது போல் அவர்களது சொத்தின் கிழபுறம் தென்வடல் 35 அடி அளவில் இல்லை என்பதும் தெரியவருகிறது. இரு குறித்து நீதிமன்ற ஆணையரின் அறிக்கை, வரைபடம் மற்றும் புகைப்படங்களை பரிசீலிக்கும்போது, எதிர்மனுதாரர்கள் புதியதாக அவர்களது கட்டுமானத்தை விரிவுபடுத்தியுள்ள பகுதியானது மேற்படி கிழமேல் காம்பவுண்டு சுவரையும் சேர்த்து அளவீடு செய்யப்பட்ட வகையில் தான் எதிர்மனுதாரர்களின் கட்டிடத்தின் வெளிப்பகுதியின் கிழபுறம் தென்வடல் அளவு 34 அடி 9 இன்ச் என்பதும் தெரியவருகிறது.

**6.12** மேலும் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள நீ.ம.சா.ஆ.4 வரிசையில் புகைப்பட எண். 8ல் மனு சொத்தின் தென்புறத்தில் உள்ள கிழமேல் காம்பவுண்டு சுவர் மீது ஏற்கனவே எதிர்மனுதாரர்களின் கட்டிடம் அமைந்துள்ளதும், அதன் மீது தான் அவர்கள் தற்போது புதிய கட்டுமானத்தை கட்டுகிறார்கள் என்பதும் தெரியவருகிறது. எனவே மனு சொத்தின் தென்புறத்தின் உள்ள கிழமேல் காம்பவுண்டு சுவர் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்திற்குள் தான் கட்டப்பட்டுள்ளது

என்றும், மனு சொத்தின் மேல்புறம் தென்புறத்தில் கிழமேல் காம்பவுண்டு சுவர்மீது ஏற்கனவே எதிர்மனுதாரர்களின் கட்டிடம் உள்ளது என்றும், அதன் மீது தான் அவர்களது தற்போதைய புதிய கட்டுமானம் கட்டப்படுவதாக இந்நீதிமன்றம் முடிவு செய்து, இம்மனுவில் பிறப்பிக்கப்பட்ட "Status Quo" உத்தரவை நீக்கறவு செய்து, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்,** மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, மேற்படி தேதியன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.09 17:38:05 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்

**<u>மனுதாரர் தரப்பு சாட்சியம் :</u>** இல்லை

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 07.03.2007 | கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி :</u> இல்லை**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :**

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | - | தானசெட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> :–**

| | | | |
|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | – | நீதிமன்ற ஆணையர் அறிக்கை | அசல் |
| நீ.ம.சா.ஆ.2 | – | நீதிமன்ற ஆணையர் புலவரைபடம் | அசல் |
| நீ.ம.சா.ஆ.3 | – | நீதிமன்ற ஆணையர் புலவரைபடம் | அசல் |
| நீ.ம.சா.ஆ.4 | – | புகைப்படங்கள் ( 15 எண்ணிக்கை) | கணிணி நகல் |

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.09 17:38:13 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்